

சென்னையில் கழக இளைஞர் அணிச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து, கேரளத்தின், சமூக சீர்திருத்தவாதிகளுள் ஒருவரான நாராயண குரு அவர்களின் வாழ்க்கை வரலாற்றை `தெற்கின் புத்தர்' எனும் நூலாக எழுதி வெளியிட்டிருக்கும் எழுத்தாளர் தமிழன் இளங்கோ தனது இணையர் சித்திரலேகாவுடன் சந்தித்து அந்நூலை வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

### புதிய திட்டங்களுக்கு ஊக்கத் தொகை உண்டா?

# சூரிய மின் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு என்ன?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி ஆக.3-

சூரிய மின் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு என்ன என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார். அவரது கேள்விகள் வருமாறு.

வலுவான கொள்கை சூழலின் ஆதரவுடன், புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இந்தியா உலகளாவிய தலைவராக உருவெடுத்துள்ளதை அரசாங்கம் கவனித்துள்ளதா, அவ்வாறாயின் அதன் விவரங்கள் என்ன;

(b) நாட்டின் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் திறனில், குறிப்பாக காற்று மற்றும் சூரிய மின் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு பற்றிய விவரங்கள்;

(c) பல்வேறு புதுப்பிக்கத் தக்க ஆற்றல் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஏதேனும் புதிய திட்டங்கள், ஊக்கத்தொகைகள் அல்லது உள்கட்டமைப்பு முயற்சிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா, அவ்வாறாயின் அதன் விவரங்கள்;

(d) தமிழ்நாட்டில் கடலோரக் காற்று ஆற்றல் (offshore wind energy), ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் (energy storage systems), பசுமை ஹைட்ரஜன் மற்றும் மின் கட்டமைப்பு நவீனமயமாக்கல் (grid modernization) ஆகியவற்றை ஊக்குவிக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளின் விவரங்கள்; மற்றும்

(e) கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் ஈர்க்கப்பட்ட முதலீடுகள், உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் மற்றும் சேர்க்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் ஆகியவற்றின் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்தார்.

### டெல்டாவில் காவிரி உரிமையை நிலைநாட்டும்

# தி.மு.க. போராட்டத்திற்கு இந்தியக் குடியரசுக் கட்சி முழு ஆதரவு!

## இந்தியக் குடியரசுக் கட்சித் தலைவர் செ.கு.தமிழரசன் அறிக்கை!

சென்னை, ஆக.3-

இந்தியக் குடியரசுக் கட்சித் தலைவர் செ.கு.தமிழரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

காவிரி உரிமையை நிலைநாட்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்டத்திற்கு இந்திய குடியரசுக் கட்சி முழு ஆதரவு அளிக்கிறது.

காவிரி நதிநீர் என்பது தமிழ்நாட்டின் உரிமையும், டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரமும் ஆகும். இந்த உரிமையை பாதுகாக்கவும், விவசாயிகளின் நலனை வலியுறுத்தவும் தஞ்சாவூரில் நடைபெறவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய குடியரசுக் கட்சி தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் களப்போர் வீரரான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஈடுபட்டிருக்கின்ற இந்த விவசாயிகளின் உணர்ச்சிப் போராட்டத்திற்கு வலிமை ஏற்றுவதற்காக இந்திய குடியரசு கட்சியின் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொள்வர்.

காவிரி நீர் பிரச்சினைக்கு சட்டரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் நிலையான தீர்வு காண மத்திய அரசும், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலனை பாதுகாப்பது அரசுகளின் முதன்மைக் கடமையாகும்.

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, தமிழ்நாட்டின் நீர் உரிமை மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் எந்த முயற்சிக்கும் இந்திய குடியரசு கட்சி உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு செ.கு.தமிழரசன் அறிக்கை விடுத்துள்ளார்.

### மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

# வேளச்சேரி மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. அறிவிப்பு!

சென்னை, ஆக. 03

வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பகுதி அவைத் தலைவர் சி.பழனி தலைமையில் இன்று (03.08.2026 திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு, வேளச்சேரி, சிறுவர் விளையாட்டு பூங்கா, விஜயநகர் 1 வது மெயின் ரோட்டில் உள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் பகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

தலைவர் கலைஞர் அவர்களின் புகழாஞ்சலி மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



பல்லாவரம் கோயில் விழாவில் பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர் பூ.செந்தில்குமார் ஏற்பாட்டில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாவட்ட துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஆகியோர் சமபந்தி விருந்தை துவக்கி வைத்தனர். அருகில் பல்லாவரம் வடக்கு பகுதி துணைச் செயலாளர் சிவக்குமார், கண்டோன்மெண்ட் மாணவர் அணி அமைப்பாளர் எம்.பி.மகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட துரோக வரலாறு!

தமிழ்நாட்டையும் தமிழ்நாட்டு மக்களையும் பல அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, தமிழர் வாழ்வு உயர வேண்டும் என்று எண்ணி தங்கள் கருத்துகளால் யுத்தம் செய்து, புரட்சிகளை விதைத்து, இன்றைய நவீன தமிழ்நாட்டின் உண்மையான சிற்பிகளாய் விளங்கும் வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகள்.

தி.மு.க.வின் வலி நிறைந்த வரலாற்றில் காங்கிரசுக்கு எப்போதும் முக்கியப் பங்கு இருக்கிறது. இனவுணர்வும் , மொழியுணர்வும் கொண்ட தமிழர்களிடம், ஆதிக்கத்தைச் செலுத்தி, தாய்மொழியை இரண்டாம் நிலைக்குத் தள்ளுவதற்கு முயற்சித்த வரலாறு காங்கிரஸிற்கு எப்போதும் உண்டு.

மானமுள்ள தமிழ் மாணவர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து தங்கள் உரிமைகளுக்காகக் களமாட வந்த பொழுது, குருவி சுடுவது போல் அன்றைக்கு தமிழ்நாட்டை ஆண்ட காங்கிரஸ் அரசு சுட்டுக் கொன்றது! அந்தத் துரோக வரலாறு ஞாபகம் இருக்கிறதா காங்கிரஸிற்கு?

உங்களுடைய வரலாறை சற்று கூர்ந்து நோக்கிப் பார்க்க வேண்டும். சேரன்மகாதேவியில் வ.வே.சு. ஐயர் என்பவர் காங்கிரஸ்நிதிப்பங்களிப்பில்நடத்திய குருகுலத்தில், பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதவர்களுக்கும், தனிப் பந்தி பரிமாறப்பட்டதை தந்தை பெரியார் எதிர்த்தார் என்பதை காங்கிரஸ் மறந்து விட்டதா? அல்லது 1925ல் காங்கிரஸ் பிராமணர்களுக்கு ஆதரவாக நடந்து கொள்வதைக் கண்டித்து, காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநாட்டில் தந்தை பெரியார் காங்கிரஸிலிருந்து வெளியேறியதை காங்கிரஸ் மறந்து விட்டதா?

இந்திய ஜனநாயக வரலாற்றில் கருப்பு நாட்களாகக் கருதப்படுகின்ற நெருக்கடி காலகட்டத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டு மக்களுக்காக அல்லும் பகலும் உழைத்து தமிழ்நாட்டு மக்களுடைய உரிமைக்காக தொடர்ந்து இன உணர்வோடும் மொழி உணர்வோடும் செயல்பட்டு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசைத் தூக்கி எறிந்த அந்த வரலாறை காங்கிரஸ் மறந்துவிட்டது போலும். இன்றைக்கு எட்டப்பர் குறித்து பேசுகின்ற காங்கிரஸ், தன்னுடைய வரலாற்றைத் திரும்பிப் பார்த்து வெட்கப்பட வேண்டிய சூழல் இருக்கிறது.

இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து திரும்பி வந்த பொழுது, அதை வரவேற்கச் செல்ல மாட்டேன் என்று துணிவுடன் எடுத்த முடிவை சகித்துக் கொள்ளாமல், திமுக அரசை 1991-ல் டிஸ்மிஸ் செய்த காங்கிரசின் துரோக வரலாறைப் பற்றி பேசலாமா?

இந்திய வரலாற்றில் மாநில அரசுகளை செயல்படவிடாமல் முடக்கி தன்னுடைய அதிகார வெறிக்குத் தீனி போட்டுக் கொண்டே மாநில அரசுகளை கலைத்த வரலாறு காங்கிரஸிற்கு தான் உண்டு.

உச்ச நீதிமன்றத்தினுடைய எஸ்.ஆர். பொம்மை வழக்குதீர்ப்பு வந்திருக்கவில்லை என்றால், மாநில அரசுகளைக் கவிழ்க்க முயற்சித்த சூழ்ச்சியை காங்கிரஸ் தொடர்ந்து செய்திருக்கும். இதையெல்லாம் மறந்துவிட்டு காங்கிரஸ் ஆகச்சிறந்த பச்சோந்தி என்பதை மீண்டும் நிரூபிக்கிறது.

செய்யாத குற்றத்திற்கு சிலுவை சுமந்தவர்கள் யார் தெரியுமா? ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் வலிகளைச் சுமந்து, ஆட்சி அமைப்பதை இழந்து, கடும் நெருக்கடிக்கு உள்ளாகி, பல வன்முறைகளை சந்தித்த திராவிட முன்னேற்ற கழகம், பீனிக்ஸ் பறவை போல உயிர் பெற்று, மீண்டு எழுந்தது! துரோகிகளைத் தூண்டிவிட்டு கட்சியைத் துண்டாட நினைத்த வரலாறு காங்கிரஸ் மறந்துவிட்டது! வரலாற்றுப் பிழையை காங்கிரஸ் செய்திருந்தாலும் செய்யாத தவறுகளுக்கு அவச்சொல்லையும் வேதனையையும் வலியையும் தாங்கிக் கொண்டு, ஒரு இயக்கம் மக்களோடு கைகோர்த்து நடந்திருக்குமேயானால் அது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

வெறுங்கையில் மந்திரம் போட்டது போல, எத்தனை பூஜ்ஜியம் இருக்கிறது என்பதைக் கூட புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு, ஒரு பெருந்தொகையை கணக்கில் காட்டி 2G என்ற ஊழலை திமுக தான் செய்தது என்று மக்களை ஏமாற்றி நம்ப வைத்து ஒரு மாயையை உருவாக்கி, ஆட்சியை பார்ப்பனர்களிடம் கொண்டு போய் கொடுத்து, அதிமுகவினருக்கு தாரை வார்த்தது யார்? இப்படி வரலாற்றில் ஒட்டுமொத்த பிழையும் செய்தது காங்கிரஸ்தான்.



பேராசிரியர்
**தீபக் நாதன்**
மாநிலச் செயலாளர்
மாற்றுத்திறனாளிகள் அணி
திராவிட முன்னேற்றக் கழகம்

கடந்த சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணியாக இருந்து கொண்டு, வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ், தேர்தல் முடிவின்போது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சாதகமாக இல்லை என்ற காரணத்தால், கூட்டணி கட்சியின் தலைவர் என்ற முறையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல், கூட்டணியில் இருந்து மற்றொரு கூட்டணிக்கு சோப்ஃபா மாடல் கூட்டணியாக தாவல் செய்து, தமிழ்நாட்டு மக்களுக்குப் பெரும் துரோகத்தை வழங்கிய காங்கிரஸ், எட்டப்பனைப் பற்றி எல்லாம் பேசுவது, தமிழ்நாட்டு மக்களைக் குறித்து பேச அருகதையற்ற கட்சியாகவே கருதப்படுகிறது. உள்ளபடியே தற்கால தமிழ்நாட்டு இளைஞர்களுக்குத் துரோகம் செய்வது எப்படி என்பதை கற்றுக் கொடுத்து விட்டு, டெல்லியில் இருந்து வந்தவுடன், 'எட்டப்பர் யார்?' என்று வகுப்பு எடுத்துக் கொண்டிருப்பது, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு துரோகத்தை விதைத்து கொண்டி ருப்பதாக தான் புரிந்து கொள்ளப்படுகிறது. உண்மையில், 'வாழும் எட்டப்பராக' நீங்களே முழுமுதலாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை தமிழ்நாட்டு மக்கள் சார்பாக ஆணித்தரமாக சொல்லிக் கொள்கி றேன்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம்:4 49,வது வார்டு சிங்காரவேலன் தெருவில் பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அடிப்பம்பினை அகற்றி புதிய மின்மோட்டாரை பொருத்தி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு 4வது மண்டலக்குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.உடன் வட்ட நிர்வாகிகள் ஆர்.சினா மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.